கூடுதல் மாவட்ட விரைவு நீதிமன்றம், தேனி.

முன்னிலை : திருமதி. ஜி.ஸ்ரீதேவி., B.A., L.L.M.,
கூடுதல் மாவட்ட நீதிபதி, தேனி.

2026 ம் ஆண்டு மார்ச் மாதம் 26 ம் நாள் வியாழக்கிழமை

**அமர்வு வழக்கு எண் 57/2025**

*(CNR No.TNTH010015382025)*

| | |
|---|---|
| குற்றம் முறையிடுபவர் | அரசுக்காக காவல் ஆய்வாளர், தேவாரம் காவல் நிலையம். |
| எதிரிகளின் பெயர் | 1. சசி என்ற ஜெயச்சந்திரன் த.பெ. துரைராஜ்<br>2. விக்னேஷ் த.பெ. ராமர் |
| குற்ற தகவல் | 296(b), 115(2), 351(3), 109 BNS & 4 of TNPHW Act பிரிவுகளின் கீழ். |
| எதிரிகளின் பதில் | குற்றவாளிகள் இல்லை. |
| நீதிபதியின் முடிவு | குற்றவாளிகள் இல்லை. |
| காவல் நிலையத்தின் பெயரும் , குற்ற எண்ணும். | தேவாரம் காவல் நிலைய குற்ற எண் 27/2025. |
| தீர்ப்பு: | முடிவில், இவ்வழக்கின் 1வது எதிரி 296(b), 115(2), 351(3), 109 BNS & 4 of TNPHW Act பிரிவுகளின்படியும், 2வது எதிரி 296(b), 115(2), 351(3) பிரிவுகளின்படியும் தண்டிக்கத்தக்க குற்றவாளிகள் இல்லை என்று முடிவு செய்து எதிரிகளை 258 BNSS ன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது. இவ்வழக்கில் R.P.R.14/25 ல் கைப்பற்றப்பட்ட சா.பொ.1 கத்தி ஒன்றை மேல்முறையீடு காலத்திற்கு பின் அழிக்க உத்தரவிடப்படுகிறது. |

இந்த அமர்வு வழக்கானது இந்நீதிமன்றத்தின் முன் 24.03.2025 ம் தேதி இறுதி விசாரணைக்கு வந்த போது, அரசு தரப்பில் அரசு குற்றத்துறை கூடுதல் வழக்கறிஞர் திரு.எம்.சுகுமாரன் அவர்களும் , எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.P.முத்துசக்கரவர்த்தி அவர்களும் முன்னிலையாகி, விசாரணை நடைபெற்று வந்த போது, இரு தரப்பிலும் எடுத்துரைத்த வாதுரைகளுக்கு கேட்பு நல்கியும் , இதுநாள்

வரையில் என் ஆய்வில் இருந்து வந்த இவ்வழக்கில் இன்று இந்நீதிமன்றம் கீழ்கண்டவாறு வழங்கும் :-

## தீர்ப்புரை

இவ்வழக்கின் எதிரிகளுக்கும், வாதி குடும்பத்தாருக்கும் உள்ள முன் விரோதம் காரணமாக 27.02.2025ம் தேதி இரவு சுமார் 23.30 மணிக்கு வாதி தேவாரம் பெரிய ஓடைத்தெருவில் உள்ள தனது வீட்டில் இருந்த போது எதிரிகள் இருவரும் வாதியின் வீட்டு கதவை தட்டியும், காலால் எத்தியும், வெளியே வாடி தேவடியா என்று அசிங்கமாக பேசியதாகவும், அப்போது வேலை முடிந்து வந்த வாதியும், அவரது தம்பியும் எதிரிகளை கண்டித்ததற்கு, எதிரிகள் இருவரும் வாதியையும், அவரது தம்பி சிவசூர்யாவையும் கையால் அடித்து பிரச்சனை செய்ததாகவும், சத்தம் கேட்டு வந்த வாதியின் தாயார் செல்வியை பெண் என்றும் பாராமல் 1வது எதிரி அவரின் சேலையை பிடித்து இழுத்து பெண் வன்கொடுமை செய்தும், தடுக்க வந்த வாதியை 1வது எதிரி இடுப்பில் மறைத்து வைத்திருந்த கத்தியை எடுத்து கொலை செய்ய முயற்சி செய்ததாகவும், எதிரிகள் இருவரும் வாதியையும், அவரது குடும்பத்தினரையும் பார்த்து எங்களை பகச்சுக்கிட்டா தேவாரத்தில் குடியிருக்க விட மாட்டோம், உங்கள் சாவு எங்கள் கையில் தான் என்று குற்றமுறு கொலை மிரட்டல் செய்ததாக 1வது எதிரி மீது 296(b), 115(2), 351(3), 109 BNS & 4 of TNPHW Act பிரிவுகளின்படியும், 2வது எதிரி மீது 296(b), 115(2), 351(3) பிரிவுகளின்படியும் தேவாரம் காவல் ஆய்வாளர் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

2. வழக்கு முதல்நிலை விசாரணை நீதிமன்றமான போடிநாயக்கனூர் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் முதல்நிலை விசாரணை பதிவேட்டு வழக்கு எண் 08/25 ஆக கோப்பிற்கு எடுக்கப்பட்டு, எதிரிகள் முன்னிலையான உடன் அரசு சார்ந்துள்ள ஆவணங்களின் நகல்கள் அனைத்தும் 230 of BNSSன் கீழ் எதிரிகளுக்கு இலவசமாக கொடுக்கப்பட்டுள்ளன.

3. எதிரிகள் மீது சுமத்தப்பட்ட 296(b), 115(2), 351(3), 109 BNS & 4 of TNPHW Act பிரிவுகளின் கீழான குற்றச்சாட்டு அமர்வு நீதிமன்றத்தால் மட்டுமே விசாரிக்கப்படதக்கது என்பதால், மேற்படி நீதித்துறை நடுவர் இவ்வழக்கினை தேனி

மாவட்ட முதன்மை அமர்வு நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்து , அந்நீதிமன்றத்தில் அமர்வு வழக்கு எண் 57/25 ஆக கோப்பிற்கு எடுக்கப்பட்டு , விசாரணைக்காக இந்நீதிமன்றத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

4. எதிரிகள் இந்நீதிமன்றத்தில் முன்னிலையான உடன் இரு தரப்பு வாதங்களை கேட்டு, இவ்வழக்கின் 1வது எதிரி மீது 296(b), 115(2), 351(3), 109 BNS & 4 of TNPHW Act பிரிவுகளின்படியும், 2வது எதிரி மீது 296(b), 115(2), 351(3) பிரிவுகளின்படியும் அவர்களுக்கு எதிராக குற்றச்சாட்டை வனைய போதிய முகாந்திரம் இருந்ததால் அவர்களுக்கு எதிராக மேற்படி பிரிவுகளின் கீழ் எழுத்துமூலமாக குற்றச்சாட்டு வனைந்து, அதனை எதிரிகளுக்கு தமிழில் விளக்கிக் கூறி கேட்ட போது , எதிரிகள் அதனை மறுத்து , தாங்கள் குற்றவாளிகள் இல்லை என்றும் , எதிர் வழக்காட விரும்புவதாகவும் கூறினார்கள் . எனவே, இவ்வழக்கு விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது.

5. இந்த வழக்கில் அரசு தரப்பில் அ .சா.1 முதல் அ .சா.4 சாட்சிகள் விசாரிக்கப்பட்டு, அ.சா.ஆ.1 முதல் அ .சா.ஆ.8 சான்றாவணங்கள் மற்றும் சா .பொ.1 குறியீடு செய்யப்பட்டுள்ளது.

<u>6. அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்து தெரிய வரும் அரசு தரப்பு வழக்கின் விபரம் வருமாறு :</u>

அ.சா.1 சிவசூர்யா தனது சாட்சியத்தில் கடந்த 27.02.2025ம் தேதி இரவு 11.00 மணிக்கு தானும், தன் தம்பி சிவசந்துருவும் வேலையை முடித்து விட்டு ஐயப்பன் கோவில் தெரு, பெரிய ஓடைத்தெருவில் உள்ள தன் வீட்டின் அருகில் சென்ற போது கூட்டமாக இருந்தது என்றும், தான் விசாரித்த போது சண்டை நடந்ததாக தன்னிடம் சொன்னார்கள் என்றும் , போலிசார் தன்னிடம் கேட்ட போது தான் கையெழுத்து போட்டதாகவும் அரசு தரப்பு வழக்கிற்கு முரணாக பிறழ்சாட்சியம் அளித்துள்ளார்.

7. அ.சா.2 சிவசந்துரு தனது சாட்சியத்தில் 27.02.2025ம் தேதி இரவு சுமார் 10.30 மணியளவில் தானும் , தன் தம்பியும் வேலை முடித்து விட்டு வீட்டிற்கு வந்து

கொண்டிருந்த போது உயர்நிலை நீர்தொட்டி அருகில் கூட்டமாக இருந்தது என்றும் , போலிசார் தன்னிடம் வெற்றுத்தாளில் கையொப்பம் மட்டும் கேட்டதால் தான் கையொப்பம் செய்ததாகவும், தன்னிடம் காட்டப்படும் புகார் மனுவில் உள்ள கையொப்பம் மட்டும் தன்னுடையது என்றும் , அது அ.சா.ஆ.1 என்றும், புகாரில் என்ன விபரங்கள் எழுதியிருந்தது என்று தனக்கு தெரியாது என அரசு தரப்பு வழக்கிற்கு முரணாக சாட்சியம் அளித்துள்ளார்.

8. அ.சா.3 பாஸ்கரன் தனது சாட்சியத்தில் 28.02.2025 ம் தேதி காலை 09.00 மணிக்கு தான் பணியில் இருந்த போது அ .சா.2 நிலையம் ஆஜராகி கொடுத்த புகாரைப் பெற்று வழக்கு பதிவு செய்ததாகவும், புகார் அ.சா.ஆ.2 என்றும், முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.3 என்றும், சம்பவ இடம் சென்று சாட்சிகள் முன்னிலையில் பார்வை மகஜர் அ.சா.ஆ.4, வரைபடம் அ .சா.ஆ.5 தயார் செய்ததாகவும் , சாட்சிகளை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்ததாகவும் , சட்டப் பிரிவை மாறுதல் செய்து சட்டப் பிரிவு மாறுதல் அறிக்கை அ .சா.ஆ.6 தயார் செய்ததாகவும் , வழக்கு கோப்பை மேல் விசாரணைக்காக ஆய்வாளர் பார்வைக்கு வைத்ததாக சாட்சியம் அளித்துள்ளார்.

9. அ.சா.4 அய்யம்மாள் ஜோதி தனது சாட்சியத்தில் கடந்த 28.02.2025 ல் தான் ஆய்வாளராக பணியிலிருந்த போது, அ.சா.3 பதிவு செய்த வழக்கை மேல் விசாரணைக்கு எடுத்துக் கொண்டு . 1, 2 எதிரிகளை கைது செய்ததாகவும் , 1வது எதிரியிடமிருந்து குற்ற சம்பவத்திற்கு பயன்படுத்திய கத்தியை அத்தாட்சியில் கைப்பற்றியதாகவும், அத்தாட்சி அ .சா.ஆ.7 என்றும், படிவம் 91 அ.சா.ஆ.8 என்றும், கைப்பற்றிய கத்தி சா .பொ.1 என்றும், எதிரிகளை காவல் அடைப்புக்கு உட்படுத்தியதாகவும், சாட்சிகளை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்ததாகவும் , கைப்பற்றிய ஆயுதத்தை நீதிமன்றத்திற்கு அனுப்பி RPR.No.39/25 எண் பெற்றதாகவும், இறுதி விசாரணை முடித்து எதிரிகள் மீது குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்ததாகவும் சாட்சியம் அளித்துள்ளார் . இத்துடன் அரசு தரப்பு சாட்சியங்கள் முடிவுற்றன.

10. அரசு தரப்பு சாட்சியங்களில் எதிரிகளுக்கு பாதகமாக உள்ள பகுதி குறித்து கு.வி.மு.ச. 313ன் கீழ் விளக்கி வினவிய போது , எதிரிகள் மறுத்தார்கள். எதிரிகள் தரப்பில் விசாரிக்க சாட்சி இல்லை என்று கூறினார்கள்.

11. தீர்வுக்குரிய பிரச்சனை :

அரசு தரப்பில் எதிரிகளின் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டு சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபணம் செய்யப்பட்டுள்ளதா? என்பதேயாகும்.

12. தீர்வு :

இவ்வழக்கின் அரசு தரப்பு புலன் விசாரணையில், இவ்வழக்கின் எதிரிகளுக்கும், வாதி குடும்பத்தாருக்கும் உள்ள முன் விரோதம் காரணமாக 27.02.2025ம் தேதி இரவு சுமார் 23.30 மணிக்கு வாதி தேவாரம் பெரிய ஓடைத்தெருவில் உள்ள தனது வீட்டில் இருந்த போது எதிரிகள் இருவரும் வாதியின் வீட்டு கதவை தட்டியும், காலால் எத்தியும், வெளியே வாடி தேவடியா என்று அசிங்கமாக பேசியதாகவும், அப்போது வேலை முடிந்து வந்த அ.சா.1 மற்றும் அ.சா.2 ஆகியோர் எதிரிகளை கண்டித்தற்கு, எதிரிகள் இருவரும் அ.சா.1 மற்றும் அ.சா.2 ஆகியோரை கையால் அடித்து பிரச்சனை செய்ததாகவும், சத்தம் கேட்டு வந்த அ.சா.2ன் தாயார் செல்வியை பெண் என்றும் பாராமல் 1வது எதிரி அவரின் சேலையை பிடித்து இழுத்து பெண் வன்கொடுமை செய்தும் , தடுக்க வந்த அ.சா.2ஐ 1வது எதிரி இடுப்பில் மறைத்து வைத்திருந்த கத்தியை எடுத்து கொலை செய்ய முயற்சி செய்ததாகவும், எதிரிகள் இருவரும் அ.சா.1 மற்றும் அ.சா.2ஐயும், குடும்பத்தினரையும் பார்த்து எங்களை பகச்சுக்கிட்டா தேவாரத்தில் குடியிருக்க விட மாட்டோம், உங்கள் சாவு எங்கள் கையில் தான் என்று குற்றமுறு கொலை மிரட்டல் செய்ததாக 1வது எதிரி மீது 296(b), 115(2), 351(3), 109 BNS & 4 of TNPHW Act பிரிவுகளின்படியும், 2 எதிரி மீது 296(b), 115(2), 351(3) பிரிவுகளின்படியும் தேவாரம் காவல் ஆய்வாளர் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளதாவும் , எதிரிகள் குற்ற செயல்களில் ஈடுபட்டது அ.சா.4 மற்றும் அ.சா.5 மூலம் நிரூபணம் செய்யப்பட்டுள்ள நிலையில் எதிரிகளை தண்டிக்க வேண்டும் என அரசு தரப்பு வழக்கறிஞர் வாதிட்டார்.

13. இதற்கு மாறாக, எதிரிகள் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர், அரசு தரப்பு எதிரிகள் மீது சுமத்தியுள்ள குற்றச்சாட்டை நிரூபிக்கவில்லை என்றும் , அ.சா.2 கொடுத்த பொய் புகாரின் பேரில் சரிவர வழக்கை பரிசீலிக்காமல் காவல் ஆய்வாளர் தவறாக வழக்கு பதிவு செய்து, சம்பவ இடம் செல்லாமல், காவல் நிலையத்தில் வைத்து ஆவணம் மற்றும் சாட்சிகளை தயார் செய்து , எதிரிகள் மீது தவறாக குற்றப் பத்திரிக்கை தாக்கல் செய்துள்ளார் என்றும் , இவ்வழக்கில் அரசு தரப்பில் சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளுக்கும், எதிரிகளுக்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என்றும் , புலனாய்வு அதிகாரிகளான அ.சா.3 மற்றும் அ.சா.4 ஆகியோரை தவிர சம்பவத்தை கண்ணுற்ற சாட்சியான அ.சா.1, புகார் கொடுத்த சாட்சியான அ.சா.2 ஆகியோர்கள் எதிரிகளை குற்ற சம்பவத்துடன் இணைத்து சாட்சியம் அளிக்காமல், பிறழ்சாட்சிகளாகி விட்டார்கள் என்றும், எனவே, வழக்கு பதிவு செய்ததிலிருந்து ஒவ்வொரு நிலையிலும் அரசு தரப்பு வழக்கின் மீது சந்தேகங்கள் தோன்றுவதால் எதிரிகளை விடுதலை செய்ய வேண்டும் என வாதிட்டார்.

14. அரசு தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள குற்ற இறுதி அறிக்கையில் 13 பட்டியல் சாட்சிகள் முன்னிலைப்படுத்தப்பட்டுள்ள நிலையில், புகார் கொடுத்த சாட்சி, காயம்பட்ட சாட்சி, மற்றும் புலனாய்வு அதிகாரிகள் ஆகியோர்கள் மட்டும் அரசு தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.4 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார்கள். மற்ற சாட்சிகள் அரசு தரப்பில் dispense செய்யப்பட்டுள்ளார்கள்.

15. அரசு தரப்பு வழக்கினை நிரூபிக்க காயம்பட்ட சாட்சியாக அ.சா.1 சிவசூர்யா விசாரிக்கப்பட்டுள்ளார். அவர் தனது சாட்சியத்தில், *"27.02.2025ம் தேதி இரவு 11.00 மணிக்கு நானும், என் தம்பியும் வேலையை முடித்து விட்டு ஐயப்பன் கோவில் தெரு , பெரிய ஓடைத்தெருவில் உள்ள என் வீட்டின் அருகில் வந்து கொண்டிருந்த போது கூட்டமாக இருந்தது. நான் விசாரித்த போது சண்டை நடந்ததாக சொன்னார்கள் . போலிசார் என்னிடம் கையொப்பம் மட்டும் கேட்டார்கள் "* என அரசு தரப்பு வழக்கை ஆதரிக்காமல் முரணாக சாட்சியம் அளித்துள்ளார் . காயம்பட்ட நபரே அரசு தரப்பு வழக்கிற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்காமல் அ.சா.ஆ.1 புகார் மனுவிற்கு முற்றிலும் முரண்பாடாக சாட்சியம் அளித்துள்ளதால் அரசு தரப்பில் சொல்வது போல் அ.சா.1க்கு

எதிரிகள் தாக்கியதால் தான் உண்மையிலேயே காயம் ஏற்பட்டதா என்பதில் பலத்த சந்தேகம் எழுகிறது.

16. இவ்வழக்கில் காயம்பட்ட சாட்சியாக அ.சா.2 சிவசந்துரு என்பவர் விசாரிக்கப்பட்டுள்ளார். அவர் தனது சாட்சியத்தில், *" அ.சா.1 என் உடன்பிறந்த தம்பி. "27.02.2025ம் தேதி இரவு 10.30 மணிக்கு நானும், என் தம்பியும் வேலையை முடித்து விட்டு வரும் போது உயர்நிலை நீர்தொட்டி அருகில் கூட்டமாக இருந்தது. போலிசார் என்னிடம் வெற்றுத்தாளில் கையொப்பம் கேட்டார்கள். நான் கையொப்பம் செய்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் மனுவில் உள்ள கையொப்பம் மட்டும் என்னுடையது. புகாரில் உள்ள விபரங்கள் என்ன என்று எனக்கு தெரியாது. புகாரில் உள்ள கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.1"* என அரசு தரப்பு வழக்கை ஆதரிக்காமல் முரணாக சாட்சியம் அளித்துள்ளார். காயம்பட்ட நபரும், புகார் கொடுத்த நபருமான அ.சா.2 அரசு தரப்பு வழக்கிற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்காமல் அவர் கொடுத்த அ.சா.ஆ.1 புகார் மனுவிற்கு முற்றிலும் முரண்பாடாக சாட்சியம் அளித்துள்ளதால் அரசு தரப்பில் சொல்வது போல் அ.சா.1க்கு உண்மையிலேயே காயம் ஏற்பட்டதா என்பதிலும், புகார் மனு உண்மையானதா என்பதிலும் பலத்த சந்தேகம் எழுகிறது.

17. மேலே குறிப்பிட்டவாறு அ.சா.ஆ.1 புகார் மனு கொடுத்த சாட்சியான அ.சா.2, காயம்பட்ட சாட்சியான அ.சா.1 ஆகியோர்கள் அரசு தரப்பு வழக்கிற்கு பாதகமாக சாட்சியம் அளித்துள்ள நிலையில், இந்த குற்ற வழக்கை முதல் புலன் விசாரணை செய்த அ.சா.3 மற்றும் மேல்விசாரணை செய்து குற்றப் பத்திரிக்கை தாக்கல் செய்த அ.சா.4 ஆகிய புலன் விசாரணை அதிகாரிகளின் சாட்சியம் மற்றும் அவர்கள் தரப்பில் சமர்ப்பிக்கப்படும் ஆவணங்களை மட்டும் வைத்து கொண்டு எதிரிகளை குற்ற தீர்ப்புக்கு உள்ளாக்க முடியாது என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது. மேலும், அ.சா.4 புலனாய்வு அதிகாரி 1வது எதிரியை கைது செய்து அவர் கொடுத்த தகவலின் அடிப்படையில் சா.பொ.1 கத்தி கைபற்றப்பட்ட என்பதும் இவ்வழக்கில் நிரூபணம் செய்யப்படவில்லை என்பது தெரிய வருகிறது.

18. எனவே, மேலே பரிசீலித்துள்ள வகையில் வழக்கு பதிவு செய்ததிலிருந்து ஒவ்வொரு நிலையிலும் அரசு தரப்பு வழக்கின் மீது சந்தேகங்கள் தோன்றுவதால் இந்த சந்தேகங்களின் பலன்கள் எதிரிகளுக்கு கிடைக்கத்தக்கது என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

19. ஆகையால், இவ்வழக்கில் அரசு தரப்பில் முன்னிறுத்தப்பட்ட சாட்சி மற்றும் சான்றாவணங்கள் மற்றும் சான்று பொருட்களை கவனமாக பரிசீலனை செய்யும் போது , அவைகள் எதிரிகளை குற்ற செய்கையுடன் இணைக்கும் வகையில் இல்லை என்பது தெரிய வருகிறது. எனவே, 1வது எதிரி மீது 296(b), 115(2), 351(3), 109 BNS & 4 of TNPHW Act பிரிவுகளின்படியும், 2 எதிரி மீது 296(b), 115(2), 351(3) பிரிவுகளின்படியும் உள்ள குற்றச்சாட்டுக்களை அரசு தரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி எதிரிகளுக்கு எதிராக நிரூபிக்கவில்லை என இந்நீதிமன்றம் முடிவு செய்து , எதிரிகளை இவ்வழக்கில் குற்றவாளிகள் இல்லை என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

20. முடிவில், இவ்வழக்கின் 1வது எதிரி 296(b), 115(2), 351(3), 109 BNS & 4 of TNPHW Act பிரிவுகளின்படியும், 2 எதிரி 296(b), 115(2), 351(3) பிரிவுகளின்படியும் தண்டிக்கத்தக்க குற்றவாளிகள் இல்லை என்று முடிவு செய்து எதிரிகளை 258 BNSS ன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது.

21. இவ்வழக்கில் R.P.R.14/25 ல் கைப்பற்றப்பட்ட சா .பொ.1 கத்தி ஒன்றை மேல்முறையீடு காலத்திற்கு பின் அழிக்க உத்தரவிடப்படுகிறது.

இந்த தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்தாளருக்கு சொல்லப்பட்டு , அவரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் என்னால் சரிபார்க்கப்பட்டு 26.03.2026 ம் நாள் இன்று இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

G SREE DEVI

Digitally signed by G SREE DEVI
Date: 2026.03.30 19:32:46 +0530

கூடுதல் மாவட்ட நீதிபதி,
தேனி.

<u>அரசு தரப்பு சாட்சிகள் :</u>

அ.சா.1 ... சிவசூர்யா

அ.சா.2 ... சிவசந்துரு

அ.சா.3 ... பாஸ்கரன்

அ.சா.4 ... அய்யம்மாள் ஜோதி

<u>அரசு தரப்பு சான்றாவணங்கள் :</u>

அ.சா.ஆ.1 ... புகார் மனுவில் உள்ள அ.சா.1 ன் கையெழுத்து மட்டும்

அ.சா.ஆ.2 ... புகார் மனு

அ.சா.ஆ.3 ... முதல் தகவல் அறிக்கை

அ.சா.ஆ.4 ... பார்வை மகஜர்

அ.சா.ஆ.5 ... வரைபடம்

அ.சா.ஆ.6 ... சட்டப் பிரிவு மாறுதல் அறிக்கை

அ.சா.ஆ.7 ... அத்தாட்சி

அ.சா.ஆ.8 ... படிவம் 91

<u>அரசு தரப்பு சான்று பொருள் :</u>

சா.பொ.1 ... சுமார் 25 செ.மீ. நீளமுள்ள மரக்கைப்பிடியுடன் கூடிய கத்தி–1. (மரக்கைப்பிடி சுமார் 10 செ.மீ நீளம், இரும்பு பாகம் சுமார் 15 செ.மீ. நீளம், 2 செ.மீ. அகலம்)

<u>எதிரிகள் தரப்பு சாட்சி, சான்றாவணங்கள், சான்று பொருள் : இல்லை.</u>

G SREE DEVI

Digitally signed by G SREE DEVI
Date: 2026.03.30 19:32:54 +0530

கூடுதல் மாவட்ட நீதிபதி,
தேனி.